Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 322/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சம்பத்குமார் |
| Father's Name | – | சிவசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 21st November 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி 28.02.2022 ம் தேதி விருப்ப ஓய்வு பெற்றேன். இதற்கு முன்னர் மகாலிங்கபுரம் காவல்நிலையத்தில் கடந்த 13.02.2019 ம் தேதி தலைமைக் காவலராக இருந்தபோது, இரவு 11 மணிக்கு பொள்ளாச்சி மகாலிங்கபுரம் விவேகானந்தர் வீதியை சேர்ந்த தங்கவேல் மகன் ராஜேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையக்குற்ற எண்.21/2019, பிரிவு 381 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பாதிக்கப்பட்ட நபர் இவ்வழக்கில் புகார் அளிக்கவில்லையென்றால் சரிதான். 09.01.2019 ம் தேதி சம்பவம் நடந்தது என்றால் சரிதான். புகார் 33 நாட்கள் கழித்துதான் என்னிடம் வந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் 8 வது காலத்தில் காலதாமதம் குறித்து குறிப்போ விரிவான விளக்கம் ஏதேனும் இல்லையென்றால் சரிதான்.

புகார் பெறப்பட்ட அன்று இரவு வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளரிடம் கொடுத்துவிட்டேன். சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு ஏற்றாற்போல் நானே புகார்தாரரிடம் புகாரை எழுதி வாங்கிக்கொண்டேன் என்றாலும், அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவிலலையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi